செ.வெ.எண். நாள். 19.12.2011

**நாமக்கல் மாவட்டத்திற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக்குழு 21.12.2011 அன்று வருகை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஜெ. குமரகுருபரன்,இ.ஆ.ப அவர்கள் தகவல்.**

----

நாமக்கல் மாவட்டத்திற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழு 21.12.2011 அன்று வருகை தரவுள்ளது. இக்குழுவின் தலைவர் பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் திரு என். டி. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் உறுப்பினர்களாக 10 சட்டமன்ற உறுப்பினர்கள் இக்குழுவில் உள்ளனர். இக்குழுவில் இடம்பெற்றுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் 1. திரு எம்.கே. அசோக் (வேளச்சேரி) 2. திரு அ. அஸ்லம் பாஷா (ஆம்பூர்) 3.திரு இரா. குமரகுரு (உளுந்தூர்பேட்டை) 4. திரு டி. செங்குட்டுவன் (வேப்பனஹள்ளி) 5. திரு ப. டில்லிபாபு (அரூர்) 6. முனைவர் செ.கு. தமிழரசன் (கீழ்வைத்தனான்குப்பம்) 7. திரு ஏ.கே. போஸ் (மதுரை, வடக்கு) 8. திரு. எஸ்.பி. முத்துக்குமரன் (புதுக்கோட்டை) 9. திரு ஏ.கே.டி. ராஜா (திருப்பரங்குன்றம்) 10. திரு கே.சி. வீரமணி (ஜோலார்பேட்டை)

மேலும் சட்டமன்ற செயலாளர் அ.மு.பி.ஜமாலுதீன், இணைச் செயலாளர் திருமதி இரா. அமிர்தவல்லி, துணைச் செயலாளர் திரு பா. அன்பழகன், சார்பு செயலாளர் திரு மா. கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் இக்குழுவினருடன் வருகை தரவுள்ளார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழுவினர் 21.12.2011 அன்று முற்பகல் நாமக்கல் மாவட்டத்தில் நிலுவையிலுள்ள மற்றும் நிறைவேற்றப்பட்ட முக்கியமான உறுதிமொழிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யவுள்ளார்கள். பிற்பகல் 3.00 மணிக்கு மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கத்தில் நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு துறைகள் தொடர்புடைய உறுதிமொழிகளை இக்குழு ஆய்வு செய்யும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

வெளியீடு : செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.